**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.97/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | முத்துகுமார் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01st day of October 2021.

நான் எடுப்பூரில் வசித்து வருகிறேன். ஐஸ்கீரிம் வியாபாரம் பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் என்னுடைய அம்மா. ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு எதிரியையும் தெரியும். என்னுடைய அண்ணன் மற்றும் அண்ணி. 28.07.2015 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் என்னுடைய அம்மாவும் வீட்டில் தான் இருந்தோம். எதிரி என்னுடைய அம்மாவை அவதூறான வார்த்தைகளால் பேசி, தலை முடியை பிடித்து தரையில் இழுத்தார் அதில் இடது முன் நெற்றி, வலது முட்டு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நான் தட்டி கேட்டதற்கு 2 - வது எதிரி கம்பை எடுத்து வந்து 1 - வது எதிரியிடம் இவர்களை காலி பண்ணினால் தான் சொத்து கிடைக்கும் என்று சொன்னார். 1 - வது எதிரி என்னை இடது முட்டிலும், முதுகிலும் கம்பால் அடித்தார். சம்பவத்தை நிறைய பேர் பார்த்தார்கள். 1 - வது எதிரி என் கையால் தான் உனக்கு சாவு என்று கூறி அ.சா.1 யை அடித்தார். சம்பவத்தின போது என்னுடைய மனைவி, என்னுடைய குழந்தைகள் ஆகியோர்கள் இருந்தார்கள் சத்தம் போட்டு அழுதார்கள். அ.சா.1 யை என்னுடைய அப்பா ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் உங்கள் வீட்டில் தான் நடந்தது என்றால் வீட்டின் முன் நடந்தது. உங்கள் வீட்டில் இருந்த உங்கள் அம்மாவை எதிரி தலை முடியை பிடித்து இழுத்து வந்தார் என்றால் சரிதான். உங்களுக்கு எந்த காலில் காயம் என்றால் வலது காலில் காயம் ஏற்பட்டது இதற்கு சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் கால் மணி நேரம் நடந்து இருக்கும். நீங்கள் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால்

சம்பவம் நடந்தவுடன் சென்றேன். காவல்நிலையத்திற்கு யாரெல்லாம் சென்றீர்கள் என்றால் நான் என்னுடைய அம்மா, அப்பா ஆகியோர் சென்றோம். புகார் மனு யார் கொடுத்தார் என்றால் அப்பா கொடுத்தார். மருத்துவமனைக்கு எப்போது சென்றீர்கள் என்றால் அப்பா தான் அழைத்து சென்றார். உங்களுடைய வீட்டின் இ.பி லைன் எதிரியின் வீடு மாடியின் வழியாக செல்வதால் உங்களுக்கும் அவருக்கும் பிரச்சனை என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் சிவராஜ் நாடார், சிவலிங்க நாடார், சீமான் நாடார், ஈசாக்நாடார் மேலும் 5, 6 பேர் இருந்தார்கள். சம்பவத்தை அவர்கள் விலக்கி விட்டார்என்றால் எதிரி தரகுறைவாக திட்டியதால் அவர் அவர் அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டனர். சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையத்திற்கு உங்கள் அம்மாவை எதில் அழைத்து சென்றீர்கள் என்றால் என் அப்பா மோட்டார் சைக்கிளிலில் அழைத்து சென்றார். நீங்கள், உங்கள் அம்மா, தம்பி ஆகியோர்கள் சேர்ந்து எதிரியை அடித்ததாக வழக்கு உள்ளது என்றால் அது பொய் வழக்கு. நீதிமன்றத்தில் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி வழக்கை விசாரணை செய்யவில்லை பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் விசாரணைக்கு வரவில்லை பொய் வழக்கு என்று முடிந்துவிட்டதாக சொன்னார்கள். 2 வது எதிரியின் நகையை உங்கள் அம்மாவும், அப்பாவும் அடகு வைத்ததால் அவர்களுக்குள் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் அடகு வைக்கவில்லை. உங்களுக்கு காயம் ஏற்படாததால் தான் மருத்துவ சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுடைய வீட்டின் வழியாக இ.பி லைன் பிரச்சனை கொண்டு எதிரிக்கு எதிராக இந்த வழக்கை கொடுத்து பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. 1 - வது எதிரி சொத்துக்காக பிரச்சனை செய்யவில்லை அவருக்கு ஏற்கனவே உங்கள் அப்பாவால் 6 மரக்கா நிலம் கொடுக்கப்பட்டது என்றால் நிலம் கொடுக்கபடவில்லை எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை, உங்கள் அம்மா அவரே ஏற்படுத்தி கொண்ட காயத்தை கொண்டு பொய்யாக வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

} CC.No.97/2017

Deposition Of Witness for } Prosecution PW 2 / Defense / Court

Name செல்வகனி

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01st day of October 2021.

நான் எடுப்பூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு எதிரியையும் தெரியும். என்னுடைய மகன் மற்றும் மருமகள். 28.07.2015 ம் தேதி நான் என்னுடைய இளைய மகன் முத்துகுமார் வீட்டில் இருந்தேன். ஆஜர் எதிரி என்னை அவதூறான வார்த்தைகளால் பேசி, நீ சொன்னால் தான் உன் கணவர் சொத்தை பிரித்து தருவானா என கேட்டார். நான் கடன்களை அடைத்த பிறகு பிரித்து தருகிறேன் என்று சொன்னேன். ஆஜர் எதிரி என் தலை முடியை பிடித்து இழுத்து ரோட்டில் போட்டு இழுத்தார். அதை பார்த்தவுடன் என்னுடைய பேரன் பேத்திகள் சத்தம் போட்டார்கள் சத்தம் கேட்டு முத்துகுமார் வந்தார். முத்துகுமார் வந்து எதற்கு அம்மாவை அடிக்கிறாய் என்று கேட்டார். நீ அம்மாவுடன் சேருவதால் தான் சொத்தை பங்கு வைத்து தரமாட்டுகிறார் என்று சொல்லி முத்துகுமாரை கம்பால் அடித்தார். இரண்டாவது எதிரி தான் கம்பை எடுத்து கொடுத்து அடிக்க சொன்னார். 1 - வது எதிரி மிகவும் தரகுறைவான வார்த்தைகளால் திட்டினார். எனக்கு முன்நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டது நான் மயங்கிவிட்டேன். நான் கண் விழித்து பார்த்த போது ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் இருந்தேன். சம்பவத்தை அருகில் உள்ளவர்கள் பார்த்தார்கள் யாரும் சாட்சி சொல்ல வரமாட்டார்கள். காட்டப்படும் புகா˙ நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பையன், 1 மகள் உள்ளனர். ஆஜர் எதிரிக்கு உங்கள் கணவர் 6 மரக்கா நிலம் கொடுத்தார் என்றால் நிலம் கொடுக்கப்பட்டது

ஆனால் பயிர் செய்யவில்லை. உங்கள் வீடு சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 அடிக்குள் இருக்கும். சம்பவ இடத்திற்கு நால்புறம் என்ன உள்ளது என்றால் மேல் புறம் பெரியசாமி வீடும், தென்புறம் சிவலிங்க நாடார் வீடு உள்ளது. 1 - வது எதிரி வீட்டிற்கு இ.பி லைன் போவது சம்பந்தமாக உங்களுக்கும் அவருக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சம்பவநடக்கும் போது யார்யார் இருந்தார்கள் என்றால் சரோஜா, ஈசாக் நாடார், துரைராஜ் நாடார், சீமான் நாடார் ஆகியோர்கள் இருந்தார்கள். சம்பவ நடக்கும் போது உங்களுடைய மற்றொரு மகன் இல்லை என்றால் சரிதான். 1 - வது எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய கம்பை சம்பவ இடத்தில் போட்டு சென்றாரா என்றால் நான் மயங்கிவிட்டதால் என்ன நடந்தது என்று தெரியவில்லை. சம்பவம் நடந்த இடம் 1 - வது எதிரியின் வீட்டு முற்றம் என்றால் சரிதான். நீங்கள் போலிசாரிடம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும் போது தான் மயக்கம் தெளிந்தது என்றால் சரிதான். புகார் மனு யார் எழுதியது என்றால் யார் எழுதியது என்று தெரியாது. 2 வது எதிரியின் நகையை உங்கள் கணவரும், நீங்களும் அடகு வைத்து திருப்பி கொடுக்காததால் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நகையை எதிரிகள் திருப்பி கேட்டதால் தான் இந்த வழக்கை பொய்யாக கொடுத்து உள்ளீர்கள், உங்களுக்கு ஏற்பட்ட காயம் நீங்களே ஏற்படுத்தி கொண்டது, உங்கள் இரண்டாவது மகன் முத்துகுமாா்க்கு காயம் ஏற்படாது என்றால் சரியல்ல. நீங்களும் உங்கள் இரண்டு மகன்களும் எதிரியை சம்பவ தினத்திற்கு மூன்று நாள் கழித்து அடித்து காயம் ஏற்படுத்தியதாக உங்கள் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான். இரண்டாவது எதிரியின் நகையை தக்க வைத்து கொள்வதற்காக இந்த வழக்கை கொடுத்துள்ளீர்கள், இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல

**<u>மறு விசாரணை இல்லை</u>**